நோட்டுப் புத்தகங்கள் விநியோகம்.

*1627— திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு வழங்கும் நோட்டு புத்தகங்கள் எப்படி வாங்கி என்ன முறையில் விநியோகிக்கப்படுகின்றது ?

(ஆ) அதனால் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கின்றது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசு வழங்கும் சலுகை விலைத் தாட்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட குறிப்பேடு தயாரிப்பாளர் மூலம் குறிப்பேடுகளைத் தயாரித்து ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாகவும் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் விநியோகம் செய்கிறது.

(ஆ) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கு இதனால் மொத்த இலாபம் ரூ. 38,25,016,16 கிடைக்கின்றது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் ஒவ்வொரு ஆண்டும் அச்சிடப்பட்டு வழங்குவதிலே, அவை உரிய காலத்திலே, வழங்கப்படாமல், காலதாமதமாக வழங்கப்படுகிறது என்ற புகார்கள் ஒவ்வொரு ஆண்டும் வருகின்றன. சென்ற ஆண்டு கூடபாடப் புத்தகங்கள் உரிய காலத்திலே கிடைக்காத நிலை இருந்தது. ஆகவே, வருகிற காலங்களில் அவை முன் கூட்டியே அச்சிடப்பட்டு, பள்ளிக்கூடங்களின் விடுமுறை காலம் முடிந்து பள்ளி தொடங்கப்படுகின்ற நேரத்திலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, குறிப்புப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் பற்றியது. இது பெருமளவுக்கு உரிய காலத்திலேயே வழங்கத் தகுந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வருகிறது. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான பாடப்புத்தகங்கள், அதுவும் புதிதாக எழுதப்படுகின்ற பாடப்புத்தகங்கள் ஆகியவற்றை அச்சிட வேண்டிய நிலைமை இருப்பது காரணமாகவும் நூற்றுக்கணக்கான அச்சுத் தொழிலகங்களில் அவை அச்சிடப்படு

வதன் காரணமாகவும் அவற்றுக்கான தாள்கள்கூட சில நேரங்களில், உரிய நேரத்தில் கிடைக்காததன் காரணமாகவும் பல்வேறு சிறுசிறு காரணங்களாலும் மொத்தத்தில் சில குறைகள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிசெய்து முறைப்படுத்தி இந்த ஆண்டாவது விரைவாக காலத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். விநியோகத்திலேகூட காலதாமதம் ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்க ஒவ்வொரு கட்டத்திலேயும் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளும்படி அரசு நிறுவனத்துக்கு அறிவித்து இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்கின்ற இடங்களிலே அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா? தமிழ்நாடு அரசாங்கம் வெளியிடுகின்ற புத்தகங்களைத் தனிப்பட்ட முறையில் தனியாருக்குக் கொடுப்பதாலே, அவர்களுக்குப் போதுமான வசதியில்லை. தாள்களை வைத்துக்கொள்வது, அச்சடித்த புத்தகங்களை வைத்துக் கொள்வது, அச்சடிப்பது போன்ற பல சிரமங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. தனியார் நிறுவனங்களுக்குக் கொடுப்பதாலே காலாகாலத்திலே அவை பிரிண்ட் செய்யப்பட்டு உரிய காலத்திலேயே கொடுக்கப்பட முடியவில்லை என்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அப்படி ஒரு பிரச்சினை எழுந்ததாக இதுவரை தெரியவில்லை. தனிப்பட்டவர்களால் அதிக விலைக்கு விற்பதாகச் சொல்லப்பட்டது. சில பாடப்புத்தகங்களைப் பொறுத்தவரையில் அப்படி அந்தத் துறையினருக்குத் தெரிய வந்து, கல்வி இலாகாவுக்குத் தெரிய வந்து, ஒரு சிலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் குறைந்த விலையில் இந்தப் புத்தகங்கள் விற்கப்படுகிற காரணத்தாலும், பெருமளவுக்கு இலவசமாக வழங்கப்படுகிற காரணத்தாலும், சில இடங்களில் சில தவறுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடக்க வாய்ப்பு இருக்கிறது. அவை அவ்வப்போது அரசால் கண்காணிக்கப்படுவதன் மூலமாகத்தான் சரி செய்யப்பட முடியும்.

9.10 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதில் கால தாமதங்கள் ஏற்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டாலும், நான் தெரிவிப்பது, ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கூட்டுறவு அச்சுக்கூடங்கள் நடைபெறுவதால், அங்கே வேலைப்பளுவும்

குறைவாக இருப்பதால், அந்த நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்களை அத்தகைய அச்சுக் கூடங்களில் அச்சிடுவதன் மூலம், ஒரே இடத்தில் கொடுத்து காலதாமதமானதைத் தடுக்கும் முயற்சியில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூல்கள், நோட்டுப் புத்தகங்கள் அச்சிடுவதற்கு டெண்டர் கேட்கப்படுகிற முறை இருக்கிறது. அந்த முறையில் கொடுக்க முன்வருபவர்களிடம் விண்ணப்பங்கள் கேட்டு, அத்தகைய அச்சகங்களின் சக்திக் கேற்ப, அவர்கள் ஆற்றிய பணிகளுக்கேற்ப, பாடநூல்கள் அச்சியேற்றும் பணி பிரித்து வழங்கப்படுகின்றது. அந்தவகையில் யாரும் விண்ணப்பிக்கலாம்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வெளியிடுகிற நோட்டுப் புத்தகங்களின் பேப்பர்கள் தரமில்லாமல் இருக்கின்றன. ஆகவே அவற்றிற்குத் தரமான தாள்கள் உபயோகிக்கப் படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாளைப் பொறுத்தவரையில் மத்திய அரசு மலிவான விலைக்கு ஒதுக்குவதால், இந்தத் தாளில் தரக் குறைவு இருப்பதற்கு நியாயம் இல்லை. ஒரு வேளை வெளியில் தயாராகிற நோட்டுப் புத்தகங்கள் தரக் குறைவாக இருக்கலாம், இருக்கக்கூடும். அப்படியிருந்தால் அது வேறு பிரச்சினை.

மருதம்புத்தூர் கிராம உயர்நிலைப்பள்ளி.

* 2056—திரு. பி. எச். பாண்டியன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள மருதம்புத்தூர் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் மற்றும் அறிவியல் விஞ்ஞான கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?